**அனுப்புநர்**

தண்.வசுந்தரா தேவி,
எம்.ஏ., எம்.பில்., எம்.எட்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை–600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

**ந.க.எண். 03 /Conf./2018,** **நாள் : 18.02.2019**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மேல்நிலை (முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு) – வினாத்தாள் வடிவமைப்பு – சார்ந்து.

**பார்வை :** இவ்வலுவலக இதே எண்ணிட்டக் கடிதம் நாள் 03.01.2019. (அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டது)

------

நடைபெறவுள்ள மார்ச் 2019, மேல்நிலை (முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு) பொதுத் தேர்வு தொடர்பாக, அனைத்து பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணையத்தில் வெளியிடப்பட்டன. மேற்படி மாதிரி வினாத்தாள் வடிவமைப்பின்படியே, பொது தேர்வுகளுக்கான வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. வினாத்தாள் வடிவமைப்பு தொடர்பாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் அறியும் வண்ணம் பார்வையில் காணும் கடிதம் மூலம் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

எனினும், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் வினாத்தாள் வடிவமைப்பு குறித்து சில வினாக்கள் எழுப்பி வருவதனால், அவை பின்வருமாறு தெளிவுபடுத்தப்படுகிறது.

**சில விளக்கங்கள் – பகுதி – I**

1. அனைத்து குறிக்கோள் வினாக்களுக்கும் (Objective type questions) 4 மாற்று விடைகள் அளித்து ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து எழுதிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. கோடிட்ட இடத்தை கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதிட வேண்டும்.

3. மாதிரி வினாத்தாளில், சில பாடங்களுக்கு "Match the following" வினாக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வகையான வினாக்களுக்கும், 4 மாற்று விடைகள் அளிக்கப்பட்டு அவற்றினுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து எழுதிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாதிரி வினாத்தாள் அமைப்பின்படியே, பொது தேர்வுகளுக்கான வினாத்தாள் வடிவமைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. எனவே, ஆசிரியர் மற்றும் மாணவர்கள் அந்தந்த பாடத்திற்குரிய மாதிரி வினாத்தாள் வடிவமைப்பினை அறிந்து அவ்வாறே பொது தேர்விற்கு தயாராகிடுதல் வேண்டும்.

**தங்கள் உண்மையுள்ள,**

(ஒம்/–)

**இயக்குநர்**